**செ. கு. எண்: 240** **நாள்:03.11.2020**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்</u>

<u>இரங்கல் செய்தி – 3.11.2020</u>

தமிழ்நாடு காவல்துறை முன்னாள் தலைமை இயக்குநர் திரு.கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் உடல்நலக் குறைவால் இன்று **(3.11.2020)** காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன்.

திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள் சென்னை மாநகர காவல் ஆணையர், காவல் துறை தலைவர் மற்றும் மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் காவல் துறை இயக்குநர் போன்ற உயர்ந்த பதவிகளில் நியமனம் செய்யப்பட்டு, திறம்பட பணியாற்றியவர் என்ற பெருமைக்குரியவர். இவர் எழுத்தாளர், சமூக ஆர்வலர் போன்ற பன்முகத் தன்மை கொண்டவர். இவர் ‘‘ராக்கி’’ என்ற பெயரில் நகைச்சுவை கட்டுரை எழுதியவர்.

திரு. ராதாகிருஷ்ணன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**